(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 35.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, ஒற்றோபர் 21, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0015 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மிஹின் எயார் ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை குத்தகைக்குப் பெறப்பட்ட, கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட விமானங்களின் எண்ணிக்கையையும்,

(ii) செலுத்தப்படும் அல்லது செலுத்தப்பட்ட தொகையை மாதாந்த அடிப்படையிலும்,

(iii) நட்டம் ஏற்படாமல் செலவை ஈடுசெய்வதற்குத் தேவையான அதிகுறைந்த சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும்,

(iv) விமான சேவையின் ஆரம்பத்திலிருந்து செலவை ஈடுசெய்வதற்கு கொண்டு செல்லப்பட்ட சரக்குகள் மற்றும் ஆட்களின் எண்ணிக்கையையும் மாதாந்த அடிப்படையிலும்,

(v) சரக்கு ஏற்றிச் செல்வதற்கான மொத்த இயலளவு, இற்றைவரை கொண்டு செல்லப்பட்ட மொத்த சரக்கின் கொள்ளளவு, மற்றும் ஆட்களின் எண்ணிக்கை ஆகியவற்றை மாதாந்த அடிப்படையிலும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) எரிபொருள், விமான சேவைகள், அலுவலக இடவசதி மற்றும் களஞ்சிய இடவசதி, வரிகள், விமான நிலுவைகள், வங்கிக் கடன்கள் மற்றும் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த கடப்பாடுகள் ஆகியவற்றின் மொத்த நிலுவையை இன்றுள்ளவாறாக கால அளவுடனும்,

(ii) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மொத்தப் பணியாளர்களையும் எல்லா பணியாளர்களுக்கும் சம்பளத்துக்குப் புறம்பாக வழங்கப்படும் உரிமைகள் அடங்கலாக மாதமொன்றுக்குச் செலுத்தப்படும் மொத்தக் கொடுப்பனவுகளையும் மாதாந்தம் 200,000 ரூபாவிற்கு சம்பளத்தைப் பெறும் எல்லா பணியாளர்களின் விபரங்களையும்,

(iii) உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருப்பினும் கூட விமானப் பணியாளர்கள் குழு பராமரிப்புக் காப்புறுதிக்காக (ACMI) அவர்கள் செலுத்தும் மேலதிகச் செலவையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0084/ '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசாங்கம் கடன் பெற்றுக்கொண்ட மூலங்களும் வட்டி வீதங்களும் யாவையென்பதையும்,

(ii) பெற்றுக்கொண்ட கடன்களுக்காக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நிபந்தனைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008 ஆம் ஆண்டில் மாத்திரம் அரசாங்கத்தினால் மீளச்செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகை யாதென்பதையும்,

(ii) மீளச்செலுத்தப்பட்ட கடன் வட்டித் தொகை யாதென்பதையும்,

(iii) மீளச் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டித் தொகைகள் எந்த மூலங்களிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காகவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0095 / ' 09

3.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி தேர்தலுக்கு முன் விளம்பரங்களை பிரசாரம் செய்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் மேற்படி நிறுவனம் ஒவ்வொரு அரசியல் கட்சியிடமிருந்தும், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்தும் மேலுள்ள ஆண்டுகளில் ஈட்டியுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக அறவிடப்படவேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இது எந்த கட்சியிடமிருந்து, எந்த நிறுவனத்திடமிருந்து மற்றும் எந்த நபரினது பிரசார நடவடிக்கைகள் சார்பாக என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0205 / ' 09

4.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரகவளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) வெளிநாட்டு மீன்பிடிப்படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படும்போது மீன்கள் தரப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 செப்டம்பர் மாதத்திலும் 2006 மே மாதத்திலும் 2008 டிசம்பர் மாதத்திலும் வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் மீன்கள் கொண்டுவரப்படுகையில் மூன்றாம் தர மீன் ஒரு கிலோகிறாமுக்கு கடற்றொழில் கூட்டுத்தாபனம் அறவிட்ட தொகை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0284 /'09

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை எல்லா வருடங் களிலும் யூன் 30 ஆம் திகதி அன்று தகைமை பெறும் சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்வாறு தகைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை,

(iii) 2004, 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வருடங்களில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை,

(ii) இவ்வாறு நீக்கப்பட்டது எவ்வடிப்படையில்,

(iii) புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பின் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் முகவரி யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0290 / '09

6.

கௌரவ விஜித ரணவீர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005.09.09 ஆந் தேதிய 1410 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட வேளையில் தேசிய கல்வியியல் கல்லூரிகள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள மற்றும் ஆசிரியர் நிலையங்களில் இணைக்கப்பட்டிருந்த விரிவுரையாளர்களின் எண்ணிக்கை யாதென் பதையும்,

(ii) அவர்களின் பெயர், முகவரி, வயது, சேவைநிலையம், கல்வி மற்றும் தொழிற்றகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2008.11.19 மற்றும் 2009.04.20 ஆந் திகதிகளில் நிரந்தர விரிவுரையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டவர்கள் 2007.03.19 ஆந் திகதியில் இருந்து நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் இருந்தா தெரிவு செய்யப்பட்டன ரென்பதையும்,

(ii) மேற்படி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெயர்கள், பெற்ற புள்ளிகள் மற்றும் தகைமை பெற்றவர்களின் பெயர்கள் யாவையென் பதையும்,

(iii) ஆசிரியர் சேவையில் ஈடுபட்டிராத, ஆசிரியர் சேவையில் 05 வருடங்களுக்கு குறைந்த அல்லது பட்டமோ பட்டப்பின்படிப்போ இல்லாதவர்கள் நிரந்தர சேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனரா என்பதையும்,

(iv) ஆமெனில் அதன் சட்டபூர்வத் தன்மை யாதென்பதையும்,

(v) அவர்களின் பெயர், முகவரி மற்றும் தகைமைகள் யாவையென்பதையும்,

(vi) தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, ஏற்கெனவே இணைக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிராவிடின் அவர்கள் எப்போது நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0365 / '09

7.

கௌரவ ஆர். எம். காமினீ ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2007-2008 ஆம் ஆண்டுகளில் பொலிஸ் திணைக்களத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களில் ,வடக்கு கிழக்கு பிரதேசங்களில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி பொலிஸ் நிலையங்களின் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்ட கம்பனி யாதென்பதையும் ,

(ii) சம்பந்தப்பட்ட கம்பனிக்கு நிர்மாணிப்புப் பணிகளை கையளிப்பதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா என்பதையும் ,

(iii) கேள்விப் பத்திரத்தின் பிரகாரம் நிர்மாணிப்புப் பணிகளைச் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்கள் மற்றும் நிர்மாணிப்புப் பணிகளை மேற்கொண்ட கம்பனிகள் தனித்தனியாக யாவையென்பதையும் ,

(iv) மேற்படி கம்பனிகளுக்கு பொலிஸ் திணைக்களத்தினால் இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள தொகை யாதென்பதையும் ,

(v) புதிதாக பொலிஸ் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டமைக்காக செலுத்தப் படாதுள்ள தொகை யாதென்பதையும் ,

(vi) மேற்படி கொடுப்பனவுகள் எப்போது செலுத்தப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0452 / '09

8.

கௌரவ துனேஷ் கங்கந்த,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பி.ஜீ. ஹேமசிறி திலகரத்ன - பெல்மடுல்ல

மொஹொமட் முசம்மில் - நிட்டம்புவ

ரஞ்சித் பிரேமரத்ன - யக்கல

லால் பல்லியகுருகே - பத்தரமுல்ல

அதுல புஷ்பகுமார - அங்கொட

சிறிவர்தன கமராலகே - வெல்லம்பிட்டிய

நிஹால் படதுரகே - கனேமுல்ல

ஆகியோர் இலங்கை வெளிநாட்டு வேலவைாய்ப்புப் பணியகத்தில் சேவை உடன்படிக்கை செய்து , காப்புறுதி செய்துக்கொண்டு, மருதானை பயினாஸ் அசோசியேடட் நிருவனத்தினூடாக மாலைத்தீவில் சேவைக்காக 2009 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அனுப்பப்பட்டுள்ளார்களென்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் படி அந்த நாட்டில் சம்பளம் மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்படவில்லை என்பதையும்,

(iii) மாலைத்தீவு உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு அவர்கள் செய்த முறையீட்டின் பேரில் மீண்டும் அவர்கள் இந்நாட்டுக்கு அழைத்துவரப் பட்டுள்ளார்களென்பதையும்,

(iv) இவர்கள் இது சம்பந்தமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு முறையீடு செய்துள்ளார்களென்பதையும்

அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி முறையீடுகளின் படி அவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) உடன்படிக்கையை மீறியுள்ள குறிப்பிட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும் ,

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0527 / '09

9.

கௌரவ சந்திம வீரக்கொடி,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2004 முதல் 2009 வரையிலான காலகட்டத்தில், கடமை நேரங்களில் தனியார் வைத்திய சேவையில் ஈடுபட்டதன் மூலம் கடமையிலிருந்து தவறியுள்ளது என அறியப்பட்ட மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அத்தகைய மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்,

(ii) சம்பந்தப்பட்ட அமைச்சினால் மேற்படி மருத்துவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை யாதென்பதையும்,

(iii) அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட மருத்துவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0088 / '09

10.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி திட்ட பணிகளின் பிரகாரம் 50% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0099 / '09

11.

கௌரவ ஆர்.பி. ஏ.ரணவீர பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் பணியாற்றி வருகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவர்கள் மத்தியில் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) பட்டதாரி ஆசிரியர்களில் கலை, வணிக, விஞ்ஞான மற்றும் ஏனைய பட்டதாரிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(iv) உயர்தரப் பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கின்ற அல்லது கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(v) அப்பட்டதாரிகள் மத்தியில் ஆங்கிலத்தைப் பட்டப்படிப்பிற்காக பயின்றுள்ள அல்லது ஆங்கில மொழிமூலமாகப் பட்டத்தைப் பெற்றுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(vi) இப்பட்டதாரிகள் மத்தியில் கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம் ) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) கல்விப் பொது தராதரப் பத்திர (உயர்தரம்) பாடங்களை ஆங்கில மொழிமூலமாகக் கற்பிக்கப் போதியளவு எண்ணிக்கைகொண்ட ஆசிரியர்கள் இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0224 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "பெத்தடீன்" ஊசிமருந்தை இந்நாட்டுக்கு கொண்டு வருவதற்கான கட்டளை அனுப்பப்பட்டது எப்போது என்பதையும்,

(ii) அதன் அளவு எவ்வளவென்பதையும் ,

(iii) "பெத்தடீன்" ஊசிமருந்து அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டது எப்போதென்பதையும்,

(iv) பயன்படுத்தாமல் எஞ்சியுள்ள "பெத்தடீன்" ஊசி மருந்துகளின் அளவு எவ்வளவென்பதையும் ,

(v) "பெத்தடீன்" ஊசிமருந்து வீணாக்கப்பட்டதால் ஏற்பட்ட நிதிசார் நஷ்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) "மோப்பீன்" ஊசிமருந்து இந்நாட்டுக்கு கொண்டுவருவதற்கான கட்டளை அனுப்பப்பட்டது எப்போதென்பதையும் ,

(ii) அதன் அளவு எவ்வளவென்பதையும் ,

(iii) "மோப்பீன்" ஊசிமருந்து அரச வைத்தியசாலைகளுக்கு விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டது எப்போதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்

0389 /'09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லங்கா மெரைன் லிமிடெட், வோட்டர்ஸ் எட்ஜ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியன அரசாங்கத்திடம் மீள ஒப்படைக்கப்பட்ட திகதி என்னவென்பதையும்,

(ii) ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு ஐந்தொகையுடன் இவற்றின் இலாபம், நட்டம் ஆகியவற்றையும், தனியார் மயப்படுத்தப்பட்டதிலிருந்து இன்றுவரை இவை கைமாற்றப்பட்ட திகதிகளை வருடாந்த அடிப்படையிலும், நிறுவனங்களின் அடிப்படையிலும் தனித்தனியாகவும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) லங்கா மெரைன் லிமிடெட், வோட்டர்ஸ் எட்ஜ், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை ஆரம்பத்தில் பொறுப்பேற்ற நிறுவனங் களுக்கு செலுத்தப்பட்ட தொகை, செலுத்தப்படவேண்டியுள்ள தொகை ஆகியன என்னவென்பதையும்,

(iii) இவை தனியார் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வேலைக்கமத்தப்பட்டிருந்தவர்களது எண்ணிக்கை மீண்டும் அரசாங்கத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட பொழுது வேலைக்கமர்த்தப்பட்டவர்களது எண்ணிக்கை ஆகியவற்றையும்,

(iii) தற்போது வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களது எண்ணிக்கை என்னவென் பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0105 / ’09

14.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) தேசிய ரூபவாஹினி 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் தேர்தலுக்கு முந்திய பிரச்சார விளம்பரங்களை பிரச்சாரம் செய்ததென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இந்நிறுவனம் மேற்படி தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகள் மூலமாக ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது நிறுவனம் மற்றும் ஆட்களிடமிருந்து வருடாந்தம் ஈட்டிய பணத்தொகை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக எவ்வளவு பணத்தொகை அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்,

(iii) எக்கட்சியிடமிருந்து, நிறுவனத்திடமிருந்து, ஆளிடமிருந்து பிரச்சார நடவடிக்கைகளுக்காக இவ்விதமாக அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0489 / ’09

15.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு , பொதுமக்கள் பாதுகாப்பு ,சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நட்ட ஈட்டு உரிமை பெறுவதற்குள்ள பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனை யென்பதையும்,

(ii) நட்ட ஈட்டு உரிமையாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈட்டு உரிமை வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(iv) நட்டஈட்டு உரிமை வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர்,— கிராமோதய சபை நிதியம் (திருத்தம்),— 1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கிராமோதய சபை நிதியத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

கௌரவ லலித் திஸாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி தர்ம ஸ்தாபனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

3.

கௌரவ லலித் திஸாநாயக்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"பலன புத்தர் சிலை அமைப்புச் சபையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 123, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து எழுநூற்றி பதினைந்து மில்லியன் (ரூபா 1,715,000,000) ரூபாவிற்கும் மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 123 | — | நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| | | ஆக்கப்பொருட் செலவு | ரூ. 1,715,000,000 |
| | | | ரூ. 1,715,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 13 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 20,780,903,938.

*2.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 105, நிகழ்ச்சித்திட்டம் 02 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஏழாயிரத்து எண்ணூற்றி எழுபத்தியேழு மில்லியன் ஐந்து இலட்சம் (ரூபா7,877,500,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 105 | — தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | |
| கருத்திட்டம் : 10 | — வெளிநாட்டு உதவி அபிவிருத்தித் திட்டம் ஆக்கப்பொருட் செலவினம் | ரூ. | 7,877,500,000 |
| | | ரூ. | 7,877,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 14 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 22,495,903,938.

*3.

நீர் வழங்கள், வடிகாலமைப்பு அமைச்சர் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 166, நிகழ்ச்சித்திட்டம் 02,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து நூற்றி நாப்பத்தைந்து மில்லியன் (ரூபா 2,145,000,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு : 166 | — நீர் வழங்கள், வடிகாலமைப்பு அமைச்சு | | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | | |
| கருத்திட்டம் : 5 | — பாரரிய நீர் வழங்கள், துப்பரவேற்பாட்டு செயற்திட்டம். | | |
| உப கருத்திட்டம்: 15 | — இரண்டாம்தர நகர மற்றும் கிராமிய சமூக அடிப்படையிலான நீர் வழங்கள் மற்றும் துப்புரவேற்பாட்டு செயற்திட்டம். | | |
| நிதிக்குறியீடு : 12 (வெளிநாட்டு உதவிக்கடன்) | — ஆக்கப்பொருட் செலவினம் | ரூ. | 1,295,000,000 |
| நிதிக்குறியீடு : 17 (வெளிநாட்டு உதவிசார் உள்ளூர் நிதியம்) | — ஆக்கப்பொருட் செலவினம் | ரூ. | 850,000,000 |
| | மொத்தம் | ரூ. | 2,145,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 21 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 64,220,003,938.

*4.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 117, நிகழ்ச்சித்திட்டம் 02,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பத்தாயிரத்து அறுநூற்றி நாற்பத்தியொரு மில்லியன் (ரூபா 10,641,000,000.) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | |
|---|---|---|
| | | ரூபா |
| தலைப்பு: 117 | — நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — அபிவிருத்தி செயற்பாடுகள் | |
| கருத்திட்டம் : | | |
| 3 | — அதிவேக பாதை அபிவிருத்தி (உள்ளூர் நிதி) | 408,000,000 |

| | | | |
|---|---|---|---|
| 4 | — | நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி (உள்ளூர் மற்றும் வெளியூர் நிதி) | 819,000,000 |
| 5 | — | வீதிகள் அகலமாக்கலும், விருத்தியும் (உள்ளூர் மற்றும் வெளியூர் நிதி) | 1,610,000,000 |
| 6 | — | பாலங்களும் மேம்பாலங்களும் நிர்மாணம் (உள்ளூர் மற்றும் வெளியூர் நிதி) | 5,584,000,000 |
| 7 | — | சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகள் புனர்நிர்மாணம் (உள்ளூர் மற்றும் வெளியூர் நிதி) | 2,005,000,000 |
| 8 | — | நிருவனங்களின் உதவி (உள்ளூர் நிதி) | 215,000,000 |
| | | மொத்தம் | 10,641,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2009, ஒற்றோபர் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 22 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 66,365,003,938.

*5.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*14.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*20.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிருவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக

சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— உள்நாட்டு இறைவவரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 212 ஆம் பிரிவின் கீழ் ஆளொருவர் ஒவ்வொரு காலாண்டுக்கும் செலுத்த வேண்டிய தேசத்தை கட்டியெழுப்பும் வரி தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூன் 19 ஆந் திகதிய 1606/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தித் தீர்வை வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூன் 30 ஆந் திகதிய 1608/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும் ,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் சிகரெட், சுருட்டு, பீடி, அல்லது குழாய்கள் புகையிலை பொருட்டான மூலப்பொருள் அல்லது முடிவுற்ற பொருட்களை உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல் தொடர்பில் பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆந் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

மின்வலு, சக்தி அமைச்சர் ,— இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்வலு, சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் 03 ஆந் திகதிய 1617/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.10.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (450 ஆம் அத்தியாயமான) 1951 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, மண்வளப் பாதுகாப்புச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கும் பொருட்டு 2009.10.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*33.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*34.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*35.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*36.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*37.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*38.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்— 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

*39.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும்

2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*40.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் — 2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30 (2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*41.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*42.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2006,— 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்பு களுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப் பட்டது)

*43.

விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டது)

44.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

பிலியந்தல தர்மசாஸ்த்ரோதய பிரிவேன் விகாரஸ்த சங்வர்தன சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

மாத்தறை இராகுல கல்லூரி பழைய மாணவர் கழகம் (கொழும்புக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

49.

ஸம் நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0022 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (4)

(அ) துறைமுகங்கள் விமானசேவைகள் அமைச்சிற்காகவும் அவ்வமைச்சுக்குச் சொந்தமான ஏதேனும் கம்பனிக்காகவும் கடந்த 4 வருடங்களாக இற்றை வரையில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஒவ்வொரு வாகனத்தினதும் மொத்தச் செலவினை வருடாந்த அடிப்படையிலும், அலுவலக இடத்திற்காக வாடகைக்கு அமர்த்துவதற்கு செலவிடப்பட்ட மொத்தத் தொகையினையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) இக்காலப்பகுதியில் இவ்வாகனங்களுக்கான எரிபொருளுக்கென செலவிடப் பட்ட மொத்தத் தொகையினை அமைச்சின் மொத்த மீண்டெழும் செலவின் நூற்றுவீதமாகவும்,

(ii) வாடகைக்குப் பெறப்பட்ட அலுவலக இடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) குத்தகைக்கு கட்டிடம் பெறப்பட்ட காலத்தினையும் அதற்கு வைப்புப்பணமாகச் செலுத்தப்பட்ட முற்பணத்தையும் அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0440 / '09

2.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மத்திய மாகாண சபை தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதை மாத்தளை, கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்குரியதாக வெவ்வெறாக அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) வடமேல் மாகாண சபை தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்ட வாக்குச்சாவடிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியல் அவ்வுத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள், பதவிகள் மற்றும் மாவட்டங்கள் யாவை என்பதை வெவ்வேறாகவும்,

(ii) மத்திய மற்றும் வடமேல் மாகாண தேர்தல் நடைபெற்ற திகதிகளில் இயங்கிய கணினி அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பெயர், பதவிகள், மற்றும் நிறுவனங்கள் யாவை என்பதை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?